VISION:

உருவாகுவோம் – உருவாக்குவோம்

சமுதாய முன்னேற்றத்தின் மிக முக்கியமான பகுதி ஒவ்வொரு தனி மனிதனும் உருவாக வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனையும் உருவாக்க வேண்டும்.

MISSION:

இணைவோம் – இணைப்போம்

சமுதாய முன்னேற்றத்தில் பிறர் நம்மோடு சேர வேண்டும் என்று எண்ணுவதை விட பிறர்களோடு நாம் ஒன்றிணைய வேண்டும். யார் யார் எந்த சமுதாய சேவைகளில் இருந்தாலும் அவர்களை போட்டியாக கருதாமல் அவர்களோடு நாம் இணைந்துக் கொள்ள வேண்டும். மேலும் அவர்களின் மேம்பாட்டிற்கு உதவி செய்ய வேண்டும்.

OBJECTIVES:

1. எல்லா நிலையிலும், எல்லா காலங்களிலும் மக்களை நன்மையின் பக்கம் அழைத்தல், தீமையிலிருந்து தடுத்தல் மேலும் மக்களை அல்லாஹ்விற்கு பயந்தவர்களாகவும், நபி ஸல் அவர்களை முழுமையாக பின்பற்றக்கூடியவர்களாகவும் உருவாக்குவது.

2. மக்களை ஒன்றிணைக்க முயற்சித்தல் – ஒற்றுமை என்றால் எல்லோரும் சேர்ந்து ஒரு வேலையை செய்தல் என்பது ஒற்றுமை இல்லை. மாறாக அவரவர்கள் அவர்களின் திறமைகேற்ப வேலைகளை செய்தல். ஆனால் சமுதாய பணி செய்யக்கூடிய அனைவரும் ஆலோசனையின் அடிப்படையில் வேலைகளை பகிர்ந்து செய்தல்

3. சமுதாய மேம்பாட்டிற்காக சமுதாய பணி செய்யக்கூடியவர்கள் அடிக்கடி சந்தித்தலை அதிகப்படுத்துதல். இவ்வாறு சந்திப்பதின் காரணமாக அவர்களுக்கு மத்தியில் அன்பும், பரஸ்பரமும் உருவாக்க முடியும்.

4. தொடர் ஆய்வுகள் மற்றும் மேம்பாட்டு கருத்துரைகள் நடத்துவது. இவ்வாறு செய்வதின் காரணமாக சமூகத்தின் தற்போதைய நிலையை அறியவும், அதை மேம்படுத்தவும் வாய்ப்புள்ளது.

5. நாம் எவ்வாறு அல்லாஹ்விற்காக சிந்தனை ரீதியாகவும், செயல் ரீதியாகவும் உருவாக்கப்பட்டோமோ அதே போல் மற்றவர்களை தொடர்ந்து உருவாக்குவது.

FEDERATION OF ALL ECONOMIC CHAMBERS

1. IDEALOGY
2. SYLLABUS
3. SYSTEM
4. ADMINISTRATION / FOLLOWUP REVIEW

IDEALOGY – SCHOOL OF THOUGHT & PHILOSOPHY

1. NIYYAT – இந்த நிறுவனம் உருவாக்கத்தின் காரணம் எண்ணங்களால் நாம் ஒன்றுபட வேண்டும். நல்ல எண்ணங்களே நல்ல சிந்தனை, நல்ல சிந்தனையே நல்ல செயல்கள், நல்ல செயல்களே நல்ல வளர்ச்சி – அடுத்த 10 ஆண்டுகளில் இஸ்லாமிய சமூகத்தை ஆன்மீகம், சமூகம், பொருளாதாரம் மற்றும் கல்வி போன்ற இந்த நான்கு நிலைகளிலும் மேம்படுத்தி இந்திய நாட்டு வளர்ச்சியில் நாம் முழுமையாக பங்குபெற வேண்டும்.

2. FOLLOW THE SHARIA – நமது வளர்ச்சி என்பது அது அல்லாஹ்வை அஞ்சுவதைக் கொண்டும், நமது நபி ஸல் அவர்களை பின்பற்றுவதைக் கொண்டே உள்ளது. ஆதலால் நாம் அனைவரும் குர்ஆன், ஹதீஸ் மற்றும் முன்னோர்களின் வழிகாட்டுதலின் படி முழுமையாக நடக்க வேண்டும். எந்த நிலையிலும் ஷரியாவிற்கு மாற்றமாக அனைத்திற்கு மாற்றமாக நடக்கவோ மேலும் பேசவோ நமக்கு அனுமதியில்லை என்பதை நாம் அனைவரும் தெளிவாக புரிந்துக் கொள்ள வேண்டும்.

3. UNDERSTANDING THE SYLLABUS – இந்த நிறுவனத்திற்கு என்று ஒரு பாடத்திட்டம் உள்ளது. அந்த பாடத்திட்டம் என்பது நபி ஸல் அவர்கள் மதீனாவில் கி.பி 622 – முதல் 632 வரை 10 ஆண்டுகளில் பெறும் சமூக எழுச்சியை ஏற்படுத்திய பாடத்திட்டமாகும். அதை தான் நாம் முழுமையாக ஆய்வு செய்து தந்துள்ளோம். ஆதலால் இதை நாம் அனைவரும் முழுமையாக விளங்கி பின்பற்ற வேண்டும்.

    இந்த பாடத்திட்டம் 4 முதல்நிலை பாடமாகும். 16 துணைநிலை பாடமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

4. OBEY THE AMEER – ஒரு நிறுவனம் நிலைத்து நிற்க வேண்டும் என்றால், ஒரு நிறுவனம் தொடர்ந்து மேம்பட வேண்டுமென்றால் அந்த நிறுவனத்தின் அமீர் – பொருப்பாளருக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும். இஸ்லாத்தில் அடிமைத்தனம் என்பது இல்லை. ஆனால் கட்டுப்படுதல் என்பது நமது மார்க்கத்தின் அஸ்திவாரம். இங்கே இரண்டு விஷயங்களை புரிந்துக் கொள்ள வேண்டும். 1. அமீருக்கு கட்டுப்படுதல் 2. அந்த அமீர் மக்கள் கட்டுப்படும் படி நடந்துக் கொள்ளுதல். இந்த இரண்டு விஷயங்களுக்கும் நாம் பயிற்சி அளிக்க வேண்டும்.

5. JOIN ULEMA & UMERA - சமூக வளர்ச்சியில் உலமாக்கள் மற்றும் உமராக்கள் இருவரின் பங்கும் இன்றியமையாதது. இருவர்களும் சமூகத்தின் இரு கண்கள். இருவரும் இணைந்து சமூகத்தை வழிநடத்த வேண்டும். உலமாக்கள் இல்லாமல் உமராக்கள் மட்டுமோ அல்லது உமராக்கள் இல்லாமல் உலமாக்கள் மட்டுமோ சமூகத்தை மேம்படுத்த முடியாது. எல்லா நிலையிலும் இருவரும் சேர்ந்து தான் பயணிக்க வேண்டும். அது கூட்டமோ, சந்திப்போ, திட்டமோ அல்லது பயிற்சியோ இருவரும் சேர்ந்து செய்ய வேண்டும். நம்முடைய எல்லா குழுக்களிலும் இருவரும் சேர்ந்து இருக்க வேண்டும்.

6. FREEQUNTLY MEETING – ஒரு நிறுவனத்தின் மிக பெரிய வெற்றியே அவர்களின் தொடர் ஆலோசனைகளும், தொடர் சந்திப்பும் தான். எனவே நாம் ஆறுமாத சந்திப்பு, மூன்று மாத சந்திப்பு, மாத சந்திப்பு, வார சந்திப்பு, நாள்தோறும் சந்திப்பு என்று சந்திப்புகளை திட்டமிட்டு தரப்படும். அவைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். தொடர் சந்திப்பே தொடர் உருவாக்கம்.

7. DON’T BLAME OTHERS – எல்லா காலங்களிலும் அனைத்து தரப்பு மக்களும் தொடர்ந்து முயற்சிகள் செய்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே நாம் யாரையும் குறை சொல்ல கூடாது. இந்த குறைகளுக்கு பின்னால் சென்ற எந்த மனிதர்களுக்கும் நல்ல மௌத் வந்ததாக சரித்திரம் கிடையாது. எனவே நாம் யாரையும் குறை சொல்வது அல்லது எழுதுவது போன்ற விஷயங்களை அறவே செய்ய கூடாது. மேலும் நாம் இரண்டு விஷயங்களை அறவே பேசக் கூடாது. 1. அரசியல் 2. அகீதா இவைகளை நமது சட்டமாக ஆக்க வேண்டும்.

8. ALWAYS UPDATE R & D – இஸ்லாமிய சமூகம் கடந்த 130 ஆண்டுகளாக பின்தங்கி போனதின் காரணம் இரண்டு தான் 1. நாம் அல்லாஹ்வையும், அவனுடைய ரஸூலை விட்டு தூரமானது - குர்ஆன் – ஹதீஸ் இரண்டையும் விட்டு தூரமானது. 2. நாம் நம்மை மேம்படுத்தாமல் ஆய்வுகள் செய்யாமல் இருந்தது தான். எனவே நமது நிறுவனம் ஆய்வு மற்றும் மேம்பாடு என்று தனி குழுவை உருவாக்கி, தொடர்ந்து திட்டமிட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

9. ALWAYS CREATE THE PEOPLE – இந்த நிறுவனம் ஒரு சில மக்கள் மட்டும் இணைந்து செயல்படுத்துதல் அல்ல. மாறாக இது மக்கள் இயக்கம். தொடர்ந்து மக்களை இணைத்துக் கொண்டே இருக்க வேண்டும். தொடர்ந்து பயிற்சிகள் மூலம் மக்களை உருவாக்கிக் கொண்டே இருக்க வேண்டும். அனைவரும் செயல்பட முடியவில்லை என்றால் அவர்களுக்கு நமது கருத்தியலை ஆழமாக பயிற்சி அளிக்க வேண்டும்.

10. SUPPLICATION TO ALLAH – நமது வளர்ச்சியின் மிக முக்கியமான பகுதி நாம் அல்லாஹ்வின் எந்த அளவு நம்பிக்கை வைத்துள்ளோம் என்பதில் தான் இருக்கிறது. நாம் பகலெல்லாம் சேவைகள் செய்தாலும், நமது பொருளாதாரத்தை செலவளித்தாலும் இரவு நேரங்களில் அல்லாஹ்விடத்தில் கேட்கக்கூடிய, துஆ செய்யக்கூடிய மனிதர்களாக மாற வேண்டும். நமது உடல் பலத்திற்கு உணவுகள் உண்பதை போல, ஆன்ம பலத்திற்கு நாம் அமல் செய்ய வேண்டும். இல்லையென்றால் சீக்கிரம் தளர்ந்து விடுவோம். ஆதலால் நாம் நமது அமல்களையும் நமது ஈமானையும் பலமடைய செய்ய வேண்டும். அனைத்தையும் அல்லாஹ்விடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

    முஸ்லிம்கள் வெற்றி பெற்றாலும் வெற்றிதான்

தோல்வி அடைந்தாலும் வெற்றி தான்.

எனவே மௌத் வரை முயற்சி செய்துக் கொண்டே இருப்போம். அல்ஹம்துலில்லாஹ்.